# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2022.07.26 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

*(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)*

***2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மதுர விதானகே அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

### 2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்

*முன்னுரை*

2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் என்பதாலும் :

அத்துடன் ''இலங்கை பட்டயம் பெற்ற வரி விதிப்பு நிறுவகம்'' என அதன் பெயரினை மாற்றம் செய்வதற்கு இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் விரும்புவதாலும்:

குறித்த இலங்கை வரிவிதிப்பு நிறுவகமானது அதன் பெயரில் அத்தகைய மாற்றத்தினை மேற்கொள்ளும் வகையில் குறித்த சட்டத்தினை திருத்துவதற்கு தற்போது விண்ணப்பித்துள்ளதாலும் அத்துடன் அவ்விண்ணப்பத்தினை அனுமதிப்பது பொதுமக்கள் நன்மைக்கானதாக இருப்பதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவக (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் கூறப்படலாம்.

*2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்திற்கு செய்யப்படும் பொதுவான திருத்தம்*

**2**. (1) 2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டமானது (இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறித்துரைக்கப்படும்) முதன்மைச் சட்டவாக்கதில் ''இலங்கை வரிவிதிப்பு நிறுவகம்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ள சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை வரிவிதிப்பு பட்டய நிறுவகம்" எனும் சொற்களைப் பிரதியீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

(2) ஏதேனும் எழுத்து மூல விதியில், "இலங்கை வரிவிதிப்பு நிறுவகம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ள சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை பட்டய வரிவிதிப்பு நிறுவகம்"எனும் சொற்களைப் பிரதியீடு செய்தல் வேண்டும்.

ஒப்பந்தகள், உடன்படிக்கைகள், மேன்முறையீடுகள் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் நீடிப்பு

**3.** (1) இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தினால் அல்லது அதன் பெயரில், இந்தச் சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று ஆக்கப்பட்டு வழங்கப்பட்ட, எழுதிக் கையொப்பமிட்ட, நிறைவேற்றப் பட்ட அனைத்து உரிமைகள், பொறுப்புக்கள், கடப்பாடுகள், ஒப்பந் தங்கள், உடன்படிக்கைகள், சான்றிதழ்கள் அல்லது ஏனைய பத்திரங்கள் அல்லது ஆவணங்கள் இந்தச் சட்டம் தொடங்கும் தேதி யிலிருந்து ஆக்கப்பட்டு வழங்கப்பட்டதாக அல்லது “இலங்கை பட்டய வரிவிதிப்பு நிறுவகத்தினால்” அல்லது அதன் பெயரில் ஆக்கப் பட்டு, வழங்கப்பட்டு அல்லது எழுதிக் கையொப்பமிட்டு நிறைவேற் றப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று நிலுவையாகவுள்ள “இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்திற்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வழக்கு நடவடிக்கைகள், வழக்குகள், மேன்முறையீடுகள் மற்றும் ஏனைய சட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாவிடின் அல்லது நிறைவு செய்யப்பட்டிருக்காவிடின், இலங்கை பட்டய வரிவிதிப்பு நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்திற்கெதிராக முன்னெடுக்கப் படலாம் அல்லது அமுல்படுத்தப்படலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 3 இனைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 3 ஆனது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) பின்வரும் புதிய பிரிவானது குறித்த பிரிவின் உட்பிரிவு (அ) ஆக இத்தால் உட்புகுத்தப்படுகின்றது-

> “(அ) வரிவிதிப்பு நடைமுறை தொடர்பில் மதியுரை வழங்கும் ஆட்களுக்கான தொழில்சார் நிறுவன மொன்றினைத் தாபிப்பதற்கு ஒழுங்குவிதிகளை உருவாக்குதல்.”.

(ஆ) குறித்த பிரிவின் உட்பிரிவுகளான (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ) மற்றும் (எ) என்பவற்றினை முறையே (ஆ), (இ), (ஈ), (உ), (எ) மற்றும் (ஏ) என மீள் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) குறித்த பிரிவின் உட்பிரிவு (எ) இனை மீள் இலக்கமிட்டதன் பின்னர் உடனடியாக பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலம்-

"(ஐ) உறுப்பாண்மைக்கான அல்லது உறுப்பாண் மைத் தகைமையினைப் பெற்றுக் கொள்வதற்குக் கோருகின்ற ஆட்களுக்கான கற்கை நெறிகளினை அங்கீகரித்தல் அல்லது நடாத்துதலும் குறித்துரைத் தலும் அத்துடன் தேவையான தொழில்சார் தகைமை களினை வழங்குதலும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 4 இனைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 4 ஆனது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) குறித்த பிரிவின் உட்பிரிவு (அ) ஆனது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துதல்-

"(அ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக்கு ஏற்புடையதான தகைமைகள் மற்றும் தகைமை யின்மைகளினைக் குறித்துரைத்தலும் கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களுக்கான உயர்தொழில் நடத்தை தராதரங்கள் மற்றும் அவற்றினைப் பேணுவதற்கான நடைமுறைகளினைத் தாபித்த லும்.".

(ஆ) பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் பட்டுள்ளன -

"(ண) கூட்டுத்தாபனத்திற்கு அவசியமான உப கரணங்களை இறக்குமதி செய்வதற்கும் அதன் குறிக் கோள்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் உபகரணங்கள், நிதி மற்றும் வேறு உதவிகளினை பெற்றுக் கொள்ளுதல்."

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 5 ஆனது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 5 இனைத் திருத்துதல்

(அ) (5) பேரவையானது பின்வருத் அதிகாரங்களினைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைப் பரீட்சைகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது குறித்துரைக்கப்பட்ட கற்கை நெறிகளினை நடாத்துதல்;

(ii) கூட்டுத்தாபனத்தினால் பின்பற்றப்பட்டு வரும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி, உறுப்பினர்களுக்கிடையிலான வகையீட்டினைத் தீர்மானித்தல்;

(iii) கூட்டுத்தாபனத்தினால் பின்பற்றப்படும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு, பேரவையானது திருப்தியடையுமாயின், அத்தகையவர்களின் பதிவு செய்தல், பதிவினை நீக்குதல் மற்றும் மீளவும் பதிவு செய்தல் நடவடிக்கைகளினை மேற்கொள்ளுதல்;

(iv) உறுப்பாண்மையின் வேறுபட்ட வகையீடுகளினைப் பதிவு செய்தல் மற்றும் தகைமை பெறும் பரீட்சைகளுக்கான மற்றும் அங்கீகரித்த கற்கை நெறிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் அளிக்கப்படும் வேறு ஏதேனும் சேவை தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை விதித்தலும் அறவீடுசெய்தலும்;

(v) நிலுவையாகக் காணப்படும் ஏதேனும் சந்தாப் பணத்தினை உறுப்பினர்களுடமிருந்து அறவீடு செய்தல்;

(vi) கூட்டுத்தாபனத்திற்கு அளிக்கப்பட்ட ஏதேனும் சேவைக்கான கட்டணங்கள் அல்லது அறவீடுகளினைச் செலுத்துதல்;

(vii) கூட்டுத்தாபனத்தினால் வகுக்கப்பட்டவாறான உறுப்பாண்மையின் நடத்தைக் கோவை உள்ளடங்கலாக, ஒழுங்குவிதிகளில் அளிக்கப்பட்டவாறான தொழில்சார் ஒழுங்கீனங்கள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகளினை நடாத்துவதற்கான நடத்தைக் கோவைக்கமைவாக, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் தொழில்சார் தராதரங்களுடன் இணங்கி நடப்பதனை அமுல்படுத்துதலும் உறுதி செய்தலும்;

(viii) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி, உறுப்பினர்களினால் கோரப்படும் விசேட பொதுக் கூட்டங்களை ஏற்பாடு செய்தல்;

(ix) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி, நிருவாகச் செயலாளர் ஒருவரை நியமித்தல்;

(x) விசேட நோக்கமொன்றிற்காகவோ அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காகவோ பேரவையின் உறுப்பினர்களினைக் கொண்டதாக குழுக்களைத் தாபித்தலும் அவற்றின் நடைமுறைகள், ஆகக் குறைந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் உறுப்பாண்மை என்பவற்றினை ஒழுங்கமைத்தலும்;

(xi) கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் நியமனம், தொழில் வழங்குதல், பணியில் அமர்த்துதல், பதவியிலிருந்து விலக்குதல், சம்பளம் வழங்குதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளினை எடுத்தல்;

(xii) கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் சேவை நியதிகள் மற்றும் நிபந்தனைகளினைத் தீர்மானித்தல்;

(xiii) உத்தியோகத்தர்களினதும் பதவியினரதும் நன்மைக்காக சேமலாப நிதியங்கள் மற்றும் திட்டங்களைத் தாபித்தலும் ஒழுங்கமைத்தலும் அது தொடர்பாக பங்களிப்பு தொகைகளினைச் செலுத்துதலும்;

(xiv) "நிதி மற்றும் வரிவிதிப்புத் துறையில்" ஏனைய கல்விசார மற்றும் / அல்லது தொழில்சார் தகைமைகள் மற்றும் /அல்லது பரந்த அனுபவத் தினைக் கொண்டுள்ள ஆட்களுக்கு கூட்டுத்தாப னத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளிலிருந்து விலக்களிப்புகளினை விதித்துரைத்தல்.

(ஆ) அப்பிரிவிற்கு உட்பிரிவு 6 ஆக கீழ் குறிப்பிட்ட புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம்:-

"(6) நிறைவேற்றுக் குழுவின் சகல உறுப்பினர்களையும் அப்பதவிகளுக்கு நியமித்தல் மற்றும் பதவிகளை வகித்தல் சட்ட திட்டங்களுக்கிணங்க மேற்கொள்ளப்படுதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 6 இனைத் திருத்துதல்

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 6 ஆனது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) குறித்த பிரிவின் உட்பிரிவு (1) ஆக அப்பிரிவினை மீள இலக்கமிடுவதன் மூலம்:

(ஆ) பின்வரும் புதிய உட்பிரிவின் உட்பிரிவு (1) மீள் இலக்கம் இடப்பட்டதன் உடனடுத்து, உட்புகுத்துவதன் மூலம்:-

"(2) உட்பிரிவு (1) இன் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, கூட்டுத்தாபனத்தின் உறுப்புரிமையினைப் பெற் றுள்ள மற்றும் பேரவையினால் விதித்துரைக்கப்பட்ட ஐந்து வருட செயன்முறை அனுபவத்தினைக் கொண்

டுள்ள ஆட்கள்'' பட்டயம் பெற்ற வரி ஆலோசகர்'' ஆக தொழில் முறைப் பயிற்சியினை மேற்கொள்ளவும் அத்துடன் ''பட்டயம் பெற்ற வரி ஆலோசகர்'' என்ற பதவிப் பெயரினைப் பயன் படுத்துவதற்குமான தலைமையினைப் பெறுவர்.

(இ) முக்கியத்துவமற்ற குறிப்பினை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் வாசகத்தினை சேர்ப்பதன் மூலம்:-

''உறுப்பாண்மைக்கான தகைமை''

*முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 8 இனைத் திருத்துதல்*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 8 ஆனது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அதன் (1) உட்பிரிவின் (அ) எனும் பந்தியில், ''உறுப் பாண்மையினை வகைப்படுத்தலும், ஒவ்வொரு வகை உறுப்பினராலும் செலுத்தப்பட வேண்டியதான கட்ட ணம்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''(அ) உறுப்பாண் மையினை வகைப்படுத்தலும் உறுப்பினர்களுக்கு சான்றிதழ்களினை வழங்குதலும், உறுப்பாண்மையினை மீளப் புதுப்பித்தலும் மற்றும் ஒவ்வொரு வகை உறுப்பின ராலும் செலுத்தப்பட வேண்டிய கட்டணம்'' எனும் சொற்கள் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 9 இனை நீக்குதல்*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 9 ஆனது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பிரிவு பிரதியீடு செய்யப்படுகின்றது :-

*''பெயரின் பின் பட்டத்தின் பெயரினைப் பயன் படுத்துதல்*

கூட்டுத்தாபனத்தின் இனை உறுப்பினர் ஒருவர் தனது பெயரின் பின்னால் எப்சிஜரி எனும் எழுத்துக்களைப் பயன்படுத்துவதற்கு உரித்துடைய வர் என்பதுடன் கூட்டுத்தாபனத்தின் கூட்டு உறுப்பி னர் ஒருவர் அதே முறையில் ஏசிஜரி எழுத்துக் களைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையவராவார்.

கௌரவ இணை உறுப்பினர் ஒருவரும் கௌரவ கூட்டு உறுப்பினரும் விடயத்திற்கேற்ப முறையே எப்சிஐரி கௌரவ ஏசிஜரி எனும் பட்டங்களை அதே முறையில் பயன்படுத்துவதற்கு உரித்துடையவரா வார்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 10 இனைத் திருத்துதல்*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 10 ஆனது, “தமது பெயரின் பின்னர் எப்ரிஐஐ (இலங்கை) அல்லது கௌரவ ஏரிஐஐ (இலங்கை)” எனும் சொற்களுக்குப் பதிலாக, “விடயத்திற்கு ஏற்றவாறு பட்டங்கள் அல்லது எழுத்துக்கள் எப்சிஜரி, கௌரவ எப்சிஜரி, ஏசிஜரி அல்லது கௌரவ ஏசிஜரி சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் புதிய பிரிவு 15, 16 மற்றும் 17 இனைத் திருத்துதல்*

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் புதிய பிரிவு 14 இனை உடனடுத்து, பின்வரும் புதிய வரிவுகளான 15, 16 மற்றும் 17 ஆகியவற்றினை உட்புகுத்துதல் வேண்டும்:-

“15 கூட்டுத்தாபனம் தவிர்ந்த எந்தவொரு நபரும் அல்லது நபர்களும் அவ்வாறு செய்வதற்கு பேரவையினால் எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டாலன்றி கூட்டுத்தாபனத்தின் சின்னத்தினைப் பயன்படுத்துவோ அல்லது எடுத்துச் செல்லவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

16 கூட்டுத்தாபனத்தோடு அல்லது கூட்டுத்தாபனம் சார்பாக ஏற்படுத்தப்படும் எந்தவொரு உடன்படிக்கையும் பின்வருமாறு மேற்கொள்ளப்படலாம்:-

(அ) தனிநபர்களுக்கிடையில் செய்யப்பட்டிருந்தால், தேவையான சட்டத்தின் பிரகாரம் எழுத்திலிருப்பதுடன் உரிய தரப்பினர்கள் ஒப்பமிடப்பட்டிருத்தலும் வேண்டும். கூட்டுத்தாபனம் சார்பாக எழுத்தில் செய்யப்பட்டிருந்தால் கூட்டுத்தாபனத்தின் முத்திரையின்கீழ் இருத்தல் வேண்டும் அல்லது கூட்டுத்தாபனத்தின் சார்பில் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் ஒப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஆ) தனிநபர்களுக்கிடையில் செய்யப்பட்டிருந்தால் அவை எழுத்து மூலமன்றி வாய்மொழி மூலமானதாகவிருந்தாலும் சட்டத்தின் பிரகாரம் வலுவுடையதாகும். அத்தகைய ஒப்பந்தம் கூட்டுத்தாபனத்தின் சார்பாக அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு உறுப்பினராலும் வாய் மொழி மூலம் செய்யப்படலாம்.

17 இந்தச் சட்டத்தின்கீழ் அல்லது அதன் அதிகாரங்கள், கடமைகள் அல்லது செயலாற்றுகைகள் அல்லது செயல் நிறைவேற்றலின் போது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் எந்தவொரு செயலுக்கும் கூட்டுத்தாபனம், அதனது அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் இச்சட்டத்தின்கீழ் அதனது அல்லது அவர்களது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளினை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலின்போது நன்னோக்கில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது ஏதேனும் செய்யாமைக்காக பொறுப்பாதலாகாது, ஆயின், அத்தகைய விடுபாட்ரிமை பின்வருவனவற்றிற்கு நீடித்தலாகாது–

(அ) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழான குற்றவியல் தவறுக்கான பொறுப்பு;

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் ஏற்புடையதான சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செய்யப்பட்ட ஏதேனும் செயல் வரை நீடிப்புச் செய்யப்படுதலாகாது.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 மற்றும் 16 ஆம் பிரிவுகள் முறையே 18 மற்றும் 19 ஆக இத்தால் மீள இலக்கமிடப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 மற்றும் 16 ஆம் பிரிவுகளினை மீள் இலக்கமிடுதல்*

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*